1981 மார்ச் 31]

வாந்தி பேதி, குழந்தைகளுக்கு நிறைய வரும். அதைத் தடுப்பதற்கான முறைகளை எடுத்துவருகிறோம். டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீஸருக்கு ஆணையிட்டிருக்கிறோம். என்டமிக்காக இருக்கக்கூடிய அந்த பகுதிகளில் தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். கிழக்கு தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தீவிர கவனம் செலுத்திவருகிறார்கள். அம்மை நோய் கிடையாது. அதாவது ஸ்மால்பாக்ஸ் கிடையாது சிக்கன்பாக்ஸ் வரலாம், அது பெப்ரவரி, மார்ச் மாதங்களில் சாதாரணமாக வரும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போதுதான் தகவல் கொடுத்திருக்கிறார்கள். இந்த கவன ஈர்ப்பையொட்டியதாக இது இல்லை என்றாலும் அந்தக் கருத்தையும் பரிசீலனை செய்து நடவடிக்கை செய்யலாம்.

5. அறிக்கைகள் அளித்தல்.

(அ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

THIRU VEDASENDUR V.P. BALASUBRAMANIAM: Sir, I present the first report of the Committee on Delegated Legislation.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு.

திரு. கி. சட்டநாத கரையாளர்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் முதலாவது (ஏழாவது சட்டமன்ற பேரவை) அறிக்கையை சமர்ப்பிக்கிறேன்.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) 1981-82 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்,—ஆ. இ.

MR. SPEAKER: I have rccived the following message from the Governor of Tam'l Nadu:

In pursuance of Article 203 (3) of the Constitution of India, I, Sadiq Ali, Governor of Tamil Nadu, herby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants for the year 1981-82.

6. வரவு–செலவுத் திட்டம் 1981-82—வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்.